# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 1854/35 - 2014 මාර්තු 19 වැනි බදාදා - 2014.03.19

***1854/35 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 19 ஆந் திகதி புதன்கிழமை***

**(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

*கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி கொள்ளும் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் ஆகிய நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.*

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், தொடன்கொட பிரதேச செயலாளர் பிரிவில், தொடன்கொட கிராமத்தில் அமைந்துள்ள நில அளவை மா அதிபரினால் தயாரிக்கப்பட்ட இலக்கம் கேஏ/டீடீஎன்/ 2013/105 மற்றும் 2013.06.06 ஆந் திகதிய மதிப்பீட்டு வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 0.0768 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட 'சில்வடேல் தோட்டம்' எனும் காணித் துண்டின் எல்லைகள் :

*01.* **துண்டு 'ஏ' - சில்வடேல் தோட்டம் - விஸ்தீரணம் : 0.0768 ஹெக்டயார்**

வடக்கு : உரிமை கோருபவர் தெரியாத சில்வடேல் தோட்டம் மற்றும் நிலூகா நில்மினி உரிமை கோரும் சில்வடேல் தோட்டம் ; கிழக்கு: உரிமை கோருபவர் தெரியாத சில்வடேல் தோட்டம் ; தெற்கு: உரிமை கோருபவர் தெரியாத சில்வடேல் தோட்டம் மற்றும் வீதி ; மேற்கு: உரிமை கோருபவர் தெரியாத சில்வடேல் தோட்டம்.

ஜனக பண்டார தென்னகோன்,
காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்.

குறிப்பு இல. : 4/3/9/2012/டப்.எஸ்/384.
காணி, காணி அபிவிருத்தி அமைச்சு.
''மிஹிகத மெதுர'',
ரஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை,
2014.01.28.

*04-124*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.



இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk.எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.